TNNG020138062023

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**முன்னிலை. திரு. கோ. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,**

தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 31ம் தேதி வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 15ம் நாள் )

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.386/2023**

**CNR.No.TNNG02-013806-2023**

| | | |
|---|---|---|
| 1 | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர், நாகூர் காவல் நிலைய குற்ற எண்.171/2022. |
| 2 | எதிரி | அறிவழகன், ஆ/வ.29/2023 த/பெ. சுந்தரமூர்த்தி, வாண்டையார் தெரு, வாழமரக்கோட்டை, தஞ்சாவூர். |
| 3 | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | கடந்த 09.05.2022 ஆம் தேதி கைது செய்யப்பட்டுள்ளார். |
| 4 | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | கடந்த 09.05.2022 ஆம் தேதி அன்றே காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| 5 | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் ஆண்டுப்பட்டிகை வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | கடந்த 19.07.2023 ஆம் தேதி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், நாகப்பட்டினத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கடந்த 25.07.2023 ஆம் தேதி |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:17:22 +0530

| | | |
|---|---|---|
| | | CC.No.386/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. |
| 6 | நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் இருந்து, இந்நீதிமன்றத்திற்கு வழக்கு அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் பெறப்பட்ட நாள் | மேற்படி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து, u/s. 410 of Cr.P.C./ u/s. 450 of BNSS, 2023ன் படி இந்நீதிமன்றத்தால் Withdraw செய்து, கடந்த 20.05.2025 ஆம் தேதி பெறப்பட்டது. |
| 7 | u/s. 263 of BNSS, 2023ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களானது, இதச பிரிவுகள் 279, 338 (2 எண்ணிக்கை), 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் என்பதால், குற்றச்சாட்டுக்கள் தனியாக வனைந்து வினாவப்படவில்லை. மாறாக குற்றச்சாட்டுக்களின் சாராம்சங்கள் மற்றும் வழக்கு குறித்து மட்டுமே எடுத்துக்கூறி, இந்நீதிமன்றத்தில், கடந்த 21.06.2025 ஆம் தேதி எதிரியிடம் வினாவப்பட்டுள்ளது. |
| 8 | வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | இல்லை |
| 9 | எதிரியின் கோரிக்கை | பொய் வழக்கு. குற்றவாளி இல்லை. |
| 10 | இவ்வழக்கில் குவிமுச. பிரிவு 317ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தமான மேல் முறையீட்டு உத்தரவு | இல்லை. |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:17:30 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம் | அரசு தரப்பு/ எதிரிகள் தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
| | | அ.சா.1 | 09.07.2025 | 09.07.2025 |
| | | அ.சா.2 | 09.07.2025 | 09.07.2025 |
| | | அ.சா.3 | 16.07.2025 | 16.07.2025 |
| | | அ.சா.4 | 23.07.2025 | 23.07.2025 |
| | | அ.சா.5 | 15.09.2025 | 15.09.2025 |
| | | அ.சா.6 | 15.09.2025 | 15.09.2025 |
| | | அ.சா.7 | 15.09.2025 | 15.09.2025 |
| | | அ.சா.8 | 29.09.2025 | 29.09.2025 |
| | | அ.சா.9 | 13.10.2025 | -- |
| | | அ.சா.10 | 13.10.2025 | -- |
| | | அ.சா.11 | 13.10.2025 | -- |
| | | அ.சா.12 | 11.02.2026 | 11.02.2026 |
| | | அ.சா.13 | 11.02.2026 | 11.02.2026 |
| 12 | நீதிமன்றத்தின் முடிவு | முடிவில், இவ்வழக்கு எதிரியை இதச பிரிவுகள் 279, 338 (2 எண்ணிக்கை), 304(A)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டது. | | |
| 13 | தீர்ப்புரை | இவ்வழக்கு எதிரியை இதச பிரிவுகள் 279, 338 (2 எண்ணிக்கை), 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, u/s. 278(1) of | | |

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:17:36 +0530

| | | |
|---|---|---|
| | | BNSS, 2023ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட்டது. |
| 14 | வழக்கு சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் ஆஜர் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த ஆண்டுப்பட்டிகை வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இன்று 31.07.2026 ஆம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றத்துறை அரசு வழக்கறிஞர் திரு. S. சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. S. J. மோகன், திருமதி. K. மனிஷா மற்றும் திரு. K. V. பாலசந்தர் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கிடும் ...

## <u>தீர்ப்புரை</u>

கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில், இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரரான செல்வபிரியாவும், அவரது அம்மா செல்வராணியும், அவரது அப்பா விஜயகுமார் ஓட்டிய TN.51 D-9118 என்ற பதிவெண்கொண்ட ஆட்டோவில் நாகூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, நாகூர் வாஞ்சூர் வழியாக கங்களாஞ்சேரி

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:17:43 +0530

சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தம் அருகே சென்று கொண்டிருந்துள்ளனர். அப்போது, இவ்வழக்கின் எதிரி TN.30 AS-0345 என்ற பதிவெண்கொண்ட டஸ்டர் காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலும் ஓட்டி வந்து, மேற்படி விஜயகுமார் ஓட்டி வந்த ஆட்டோவின் மீது மோதி, நிகழ்நிலைப் புகார்தாரர் செல்வப்பிரியா மற்றும் சாட்சியான அவரது அம்மா செல்வராணி ஆகியோர்களுக்கு கொடுங்காயத்தையும், நிகழ்நிலைப் புகார்தாரரின் அப்பா விஜயகுமாருக்கு இறப்பையும் ஏற்படுத்தியுள்ளார். எனவே, இவ்வழக்கின் எதிரி இதச பிரிவுகள் 279, 338, 304(A)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக சொல்லி, நாகூர் காவல் ஆய்வாளர் கடந்த 19.07.2023 ஆம் தேதி நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அதனை பார்வையிட்டு பரிசீலனை செய்து, மேற்படி நீதித்துறை நடுவர் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.386/2023 ஆக கடந்த 25.07.2025 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துள்ளார்.

2. இவ்வழக்கு மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எதிரி ஆஜராகுவதற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு நிலுவையில் இருந்தபோது, மேற்படி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து, குவிமுச. பிரிவு 410/ u/s.450 of BNSS, 2023ன் படி இந்நீதிமன்றத்தால் Withdraw செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்திற்கு, மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டு, கடந்த 20.05.2025 ஆம் தேதி இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:17:56 +0530

3. அதன்பின்னர், அழைப்பாணையின் அடிப்படையில், இந்நீதிமன்றத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரிக்கு, இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் u/s. 230 of BNSS, 2023ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இவ்வழக்கு எதிரியிடம் அவருக்கு எதிராக அரசுத்தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் சாராம்சங்கள் குறித்து, கடந்த 21.06.2025 ஆம் தேதி எடுத்துக்கூறி விளக்கி வினாவப்பட்டது. அப்போது இவ்வழக்கின் எதிரி தனக்கு எதிராக போடப்பட்ட இவ்வழக்கு பொய் வழக்கு என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும் கூறி வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அசா.1 முதல் 13 வரையிலான சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் 18 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் முன்வைக்கப்பட்ட வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

5 (1). கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில், அசா.1 செல்வி. செல்வபிரியாவும், அவரது அம்மாவான அசா.2 திருமதி. செல்வராணியும், அவரது அப்பா விஜயகுமார் ஓட்டிய TN.51 D-9118 என்ற பதிவெண்கொண்ட ஆட்டோவில், நாகூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, நாகூர் வாஞ்சூர் வழியாக

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:18:04 +0530

கங்களாஞ்சேரி சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தம் அருகே சென்றுகொண்டிருந்துள்ளனர். அப்போது, இவ்வழக்கின் எதிரி TN.30 AS-0345 என்ற பதிவெண்கொண்ட டஸ்டர் காரை அதிவேகமாக ஓட்டி வந்து, மேற்படி விஜயகுமார் ஓட்டி வந்த ஆட்டோவின் மீது மோதியுள்ளார்.

5 (2). அவ்வாறு மோதியதில், மேற்படி ஆட்டோ கவிழ்ந்துவிட்டது. அதில் அசா.1க்கு இரண்டு கால்களிலும், கைகளிலும் எலும்பு முறிவு ஏற்பட்டதால் அவர் மயங்கிவிட்டார். அசா.1றின் தாயாரான அசா.2டிற்கு, முதுகு தண்டுவடம், வலது கால், தலை ஆகிய இடங்களில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது. அசா.1றின் தந்தையும், அசா.2டின் கணவருமான மேற்படி விஜயகுமாருக்கு தலையிலும், காலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்தினை விபத்து நடந்த இடத்தின் அருகே உள்ள தனது வீட்டிடம் நின்றிருந்த அசா.4 திரு. கலையரசன் சத்தம் கேட்டு போய் பார்த்துள்ளார். அதேபோல விபத்து நடந்த இடத்தின் அருகே உள்ள வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தத்தில் பேருந்திற்காக நின்றுகொண்டிருந்த, அசா.6 திரு. ஜெயராமனும், விபத்து சமயத்தில் அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த அசா.12 திரு. செந்தில்குமாரும் மேற்படி விபத்தினை கண்ணுற்றனர்.

5 (3). காயம்பட்ட அசா.1, 2 மற்றும் மேற்படி விஜயகுமார் ஆகிய மூவரையும், 108 ஆம்புலன்ஸ் மூலம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில், அசா.1 செல்வி. செல்வபிரியாவை

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:18:10 +0530

சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் அசாஆ.10. மேற்படி மருத்துவமனையில் அசா.2 திருமதி. செல்வராணியை சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் அசாஆ.11. மேற்படி மருத்துவமனையில் மேற்படி விஜயகுமாரை சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் அசாஆ.9. நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் மேற்படி மூவருக்கும் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், அசா.1 செல்வி. செல்வ பிரியாவை சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் அசாஆ.13. மேற்படி மருத்துவமனையில் அசா.2 திருமதி. செல்வராணியை சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் அசாஆ.14. மேற்படி மருத்துவமனையில் மேற்படி விஜயகுமாரை சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் அசாஆ.12.

5 (4). கடந்த 06.05.2022 ஆம் தேதி நாகூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த அசா.8 திரு. இளங்கோவன், அசா.1, 2 மற்றும் மேற்படி விஜயகுமார் விபத்தில் காயமுற்று, தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் சகிச்சையில் உள்ளதாக வரப்பெற்ற தகவலைப் பெற்றுள்ளார். அதன் அடிப்படையில், அசா.8 மேற்படி மருத்துவமனைக்கு சென்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த, மேற்படி விஜயகுமார் மற்றும் அவரது மனைவியான அசா.2 திருமதி. செல்வராணி

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:18:17 +0530

ஆகியோர்கள் பேசமுடியாமல் இருந்துள்ளதைப் பார்த்துள்ளார். மேற்படி விஜயக்குமாரின் மகளான அசா.1 செல்வி. செல்வபிரியா மட்டும் பேசக்கூடிய நிலையில் இருந்ததால், அவரை மட்டும் அசா.8 விசாரணை செய்து அசாஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

5 (5). பின்னர் நிலையம் வந்து, கடந்த 07.05.2022 ஆம் தேதி மாலை 05.00 மணியளவில், மேற்படி புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், நாகூர் காவல் நிலைய குற்ற எண்.171/2022, இ.த.ச பிரிவுகள்.297, 337ன் கீழ் அசாஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கையினை அசா.8 பதிவு செய்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலத்தையும், முதல் தகவல் அறிக்கையும், மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அசா.8 அனுப்பி வைத்துள்ளார். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அசா.8 அனுப்பி வைத்துள்ளார்.

5 (6). இவ்வழக்கு கோப்பினை அசா.8டே, தனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, கடந்த 07.05.2022 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில், சம்பவ இடம் சென்று, அங்கிருந்த சாட்சிகளான அசா.3 திரு. திராவிடமணி, அசா.5 திரு. ஜவகர் ஆகியோர்கள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு, அசாஆ.2 ஆன பார்வை மகஜர் மற்றும் அசாஆ.6 ஆன மாதிரி வரைபடத்தினை தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகசரில் முதலில் உள்ள சாட்சி கையெழுத்தினை அசா.3ம், 2வதாக உள்ள சாட்சி கையெழுத்தினை அசா.4ம் போட்டுக்கொடுத்துள்ளனர். 1 முதல் 7

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:18:23 +0530

வரையிலான பட்டியல் சாட்சிகளை (அசா.1 முதல் 6 மற்றும் 12 ஆகியோர்களை) அசா.8 விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (7). இந்த விபத்தில் காயமுற்ற மேற்படி விஜயகுமார், கடந்த 08.05.2022 ஆம் தேதி அதிகாலை 02.45 மணியளவில், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். அதனால் இவ்வழக்கு கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக மேற்படி நாகூர் காவல் நிலையத்தின் கடந்த 08.05.2022 ஆம் தேதி காவல் ஆய்வாளராக பணியிலிருந்த அசா.13 திரு. சிவராமன் என்பவரிடம், அசா.8 ஒப்படைத்துள்ளார்.

5 (8). அசா.13 இவ்வழக்கு கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்டு, இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை இதச பிரிவுகள் 279, 337லிருந்து, இதச பிரிவுகள் 279, 337, 304(எ) என மாற்றம் செய்து, அசாஆ.7 ஆன சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையை தயார் செய்துள்ளார். இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன மேற்படி விஜயகுமாரின் பிரேதத்தின் மீது, தஞ்சாவூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து, கடந்த 08.05.2022ம் தேதி பகல் 12.30 மணி முதல் பகல் 14.00 மணிவரை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் அசா.13 விசாரணை செய்து, அசாஆ.8 ஆன பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அப்போது மேற்படி விஜயகுமாரின் உறவினர்களான அசா.9 திரு. தியாகராஜன், அசா.10 திரு. மணி மாறன், அசா.11 திரு. கனகராஜ் ஆகியோர்களும், இந்த விபத்து குறித்து கேள்விப்பட்டு, மேற்படி மருத்துவமனைக்கு வந்து இருந்துள்ளனர்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:18:30 +0530

5 (9). மேற்படி விஜயகுமாரின் பிரேதத்தின் மீது சடலக்கூராய்வு செய்ய வேண்டி, தக்க வேண்டுகோள் கடிதத்தினை, முதல் நிலை காவலர் 859 திரு.வெற்றிச்செல்வன் என்பவர் மூலம், மேற்படி மருத்துவமனை மருத்துவரிடம் அசா.13 ஒப்படைத்துள்ளார். சடலக்கூராய்விற்கு பின்னர் விஜயகுமாரின் பிரேதத்தினை நல்லடக்கம் செய்ய வேண்டி, அவரின் உறவினர் வசம் மேற்படி முதல் நிலை காவலர் மூலம் அசா.13 ஒப்படைத்துள்ளார்.

5 (10). கடந்த 09.05.2022ம் தேதி பகல் 1.30 மணியளவில், நிலையம் ஆஜராகியிருந்த இவ்வழக்கின் எதிரியை, அசா.13 கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட டிஎன்.30 ஏஎஸ் 0345 என்ற காரினையும், டிஎன் 51 டி 9118 என்ற ஆட்டோவினையும், கடந்த 12.05.2022ம் தேதி மோட்டார் வாகன ஆய்விற்காக, தக்க வேண்டுகோள் கடிதத்துடன் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், மேற்படி அசா.13 ஆஜர் செய்துள்ளார். அவ்வாறு ஆஜர் செய்யப்பட்ட மேற்படி இரு வாகனங்களை, கடந்த 12.05.2022 ஆம் தேதி நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணியிலிருந்த அசா.7 திரு. கே. பிரபு ஆய்வு செய்து, விபத்தானது மேற்படி இருவாகனங்களின் எந்தவித இயந்திரகோளாறினாலும் ஏற்டவில்லை என கருத்து தெரிவித்து, மேற்படி காருக்கான அசாஆ.3 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கையையும், மேற்படி ஆட்டோ ரிக்ஷாவிற்கான அசாஆ.4 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கையையும் வழங்கியுள்ளார். அதுசம்பந்தமாக கடந்த

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:18:37 +0530

12.05.2023ம் தேதியே அசா.7ஐ, அசா.13 விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (11). மேற்படி விஜயகுமார், அசா.1 செல்வி. செல்வபிரியா மற்றும் அசா.2 திருமதி. செல்வராணி ஆகியோர்களுக்கு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திரு. சிவசக்தி மற்றும் திரு. ஆனந்தபிரபு ஆகியோர்களை, கடந்த 12.05.2023ம் தேதி அசா.13 விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அப்போது அசா.2 திருமதி. செல்வராணிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்து தெரிவித்து, மேற்படி மருத்துவர் திரு. ஆனந்தபிரபு, அசாஆ.15 ஆன காயம் குறித்த கருத்துரை ஆவணத்தை வழங்கியுள்ளார். அதேபோன்று, அசா.1 செல்வி. செல்வபிரியாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்து தெரிவித்து, மருத்துவர் திரு. சிவசெந்தில், அசாஆ.16 ஆன காயம் குறித்த கருத்துரை ஆவணத்தை வழங்கியுள்ளார். மேற்படி விஜயகுமாரின் பிரேதத்தின் மீது சடல கூராய்வு செய்த மருத்துவர் உதயபானு அவர்களையும், கடந்த 12.05.2023ம் தேதி அசா.13 விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அப்போது மேற்படி மருத்துவர் வழங்கிய அசாஆ.17 ஆன சடல கூராய்வு அறிக்கையையும் அசா.13 பெற்றுள்ளார்.

5 (12). தனது புலன் விசாரணை அடிப்படையிலும், இந்த விபத்தினால் அசா.1 செல்வி. செல்வப்பிரியா மற்றும் அசா.2 திருமதி. செல்வராணி ஆகியோர்களுக்கு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:18:44 +0530

கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது தெரியவந்ததாலும், மீண்டும் இவ்வழக்கின் சட்ட பிரிவுகளை இதச பிரிவுகள் 279, 337, 304(ஏ)ல் இருந்து, இதச பிரிவுகள் 279, 338, 304(ஏ) என அசா.13 மாற்றம் செய்து, கடந்த 12.05.2023 ஆம் தேதியே அசாஆ.18 ஆன சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையை தயார் செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இவ்வழக்கின் குற்ற அறிக்கையையும் அசா.13 தாக்கல் செய்துள்ளார்.

5 (13). சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.4, தான் சம்பவம் குறித்து சத்தம் கேட்டுத்தான்போய் பார்த்தேன், விபத்தினை நேரடியாக நான் பார்க்கவில்லை, விபத்து இடத்தில் அடிபட்டு கிடந்தவர்களை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது, போலிசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து நடந்த இடத்தில் சம்பந்தப்பட்ட கார் இருந்தது. ஆனால் அதன் பதிவு எண் எனக்கு ஞாபகம் இல்லை. அங்கு அந்த காரின் ஓட்டுநர் இல்லை என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சிமயமளித்துள்ளார். எனவே, அவரை அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க கோரப்பட்டது. அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், அசா.4ஐ அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

6. இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிக்கு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:18:50 +0530

பாதகமாக அளிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, கடந்த 16.02.2026 ஆம் தேதி u/s. 351(b) of BNSS, 2023ன் கீழ், இவ்வழக்கு எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கு எதிரி **"தனக்கு எதிராக கூறப்பட்ட அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் பொய். ஆட்டோவை ஓட்டியவர்தான், சாலையில் அவர் வந்த பகுதியில் குண்டும் குழியுமாக இருந்ததால், சாலையின் வலது பக்கம் ஏறிவந்து கார் மீது மோதிவிட்டார். அந்த விவரம் அப்போதே சம்பவ இடம் வந்த போலீசாருக்கு தெரியும். அதை மறைத்து சாட்சிகளை ஜோடித்து என் மீது பொய் வழக்கு போட்டுள்ளார்கள். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டு** என தெரிவித்தார். எதிரி தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்ய, இவ்வழக்கு எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிரி தரப்பில் எந்தவித சாட்சிகளையும் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. மாறாக, இன்று 31.07.2026 ஆம் தேதி எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என மேலொப்பம் எழுதிக்கொடுத்தார். அதனடிப்படையில், எதிரி தரப்பு சாட்சிய விசாரணை இல்லையென முடிக்கப்பட்டது. பின்னர் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. தற்போது தீர்வுக்குரிய விபரம் யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:18:56 +0530

8. **<u>தீர்வு :-</u>**

8 (1). அரசுத்தரப்பில், இதச பிரிவுகள் 279, 338 (2 எண்ணிக்கை), 304(A)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக சொல்லி, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவு 279ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என்றால், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, பொதுசாலையில் இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ வாகனத்தை இயக்கினார் என்பதை அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட வேண்டும். மேலும், எதிரியை இதச பிரிவு 338 (2 எண்ணிக்கை)யின் கீழ் தண்டிக்க வேண்டும் என்றால், மேற்கண்டவாறு எதிரி வாகனத்தை இயக்கியதில், அசா.1 மற்றும் 2க்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்பதையும், அரசுத்தரப்பில் நிரூபிக்க வேண்டும். மேலும், இ.த.ச பிரிவு 304 (A)ன் கீழ் ஒரு நபரை தண்டிக்கப்பட வேண்டும் என்றால், கீழ்க்கண்ட நான்கினை அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவேண்டும்.

i) விபத்து ஏற்பட்டு, அந்த விபத்தில் ஏற்பட்ட காயத்தினால்தான் அசா.1றின் அப்பாவும், அசா.2டின் கணவருமான மேற்படி விஜயகுமார் இறந்தார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ii) வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்தில் விபத்தானது விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களில் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:19:03 +0530

iii) விபத்தில் சம்பந்தப்பட்ட காரினை எதிரிதான் ஓட்டினார் என கண்ணுற்ற சாட்சியங்கள் மூலமோ அல்லது சூழ்நிலை சாட்சியங்கள் அதாவது விபத்திற்கு பின்னிட்டு எதிரியின் நடவடிக்கைகள் மூலமோ உறுதிப்படுத்தபடுத்த வேண்டும் மற்றும்,

iv) விபத்து சமயத்தில் எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ வாகனத்தை ஓட்டினார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

8 (2). எதிரிதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இந்த விபத்தில் TN 51 AD 9118 என்ற ஆட்டோவும், TN 30 AS 0345 என்ற டஸ்டர் காரும் சம்பந்தப்பட்டுள்ளது என்பது உண்மைதான். அதேபோல விபத்தானது மேற்படி இரண்டு வாகனங்களின் எந்தவித இயந்திரகோளாறினாலும் ஏற்படவில்லை என்பதும் உண்மைதான். விபத்து சமயத்தில் மேற்படி ஆட்டோவினை அரசுத்தரப்பில் சொல்லப்படும் இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன மேற்படி விஜயகுமார் என்பவர் ஓட்டினார் என்பதும், மேற்படி காரினை இவ்வழக்கின் எதிரிதான் ஓட்டினார் என்பதும் உண்மைதான். இந்த விபத்தில் அசா.1 மற்றும் 2டிற்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதும், இந்த விபத்து காயங்களினால்தான், மேற்படி விஜயகுமார் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார் என்பதும் உண்மைதான். ஆனால் இந்த விபத்தானது, அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல ஏற்படவில்லை. இவ்வழக்கின் விபத்திற்கு இவ்வழக்கு எதிரியும் காரணமில்லை. இந்த விபத்தானது, அரசுத்தரப்பில் சொல்லப்படுவதுபோல, வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தத்திடமும் ஏற்படவில்லை. மேற்படி பேருந்து

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:19:13 +0530

நிறுத்தத்திற்கு முன்பாகவே, நாகூர் - வாஞ்சூர் வழியாக கங்களாஞ்சேரி செல்லும் கிழமேல் சாலையில் நடைபெற்றுள்ளது. மேற்படி கிழமேல் சாலையில் மேற்படி விஜயகுமார், மேற்படி ஆட்டோவினை கிழக்கேயிருந்து மேற்கு நோக்கி ஓட்டிவந்தவர், சாலையின் இடதுபுற ஓரமாக செல்லாமல், அவர் செல்லவேண்டிய திசையின் சாலையின் இடதுபக்கத்தில், அந்த சாலை அப்போது குண்டும், குழியுமாக இருந்ததால், எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி காரினை இவ்வழக்கின் எதிரி மெதுவாக ஓட்டிவந்ததைப் பார்த்தும், திடீரென மேற்படி விஜயகுமார்தான் ஆட்டோவை வலது பக்கமாக ஏறிச்சென்று எதிரி ஓட்டிவந்த காரின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார். விபத்து நடந்த உடனேயே தகவல் அறிந்து இந்த நாகூர் போலீசாரும் வந்துவிட்டனர். அப்போதே அங்கிருந்தவர்களையும், எதிரி ஓட்டிவந்த காரில் உடன் வந்தவர்களையும், மேற்படி போலீசார் விசாரித்து இந்த விபத்திற்கு எதிரி காரணமில்லை என தெரிந்துகொண்டனர். அதனால்தான் உடனடியாக எந்தவித வழக்கும் பதிவு செய்யவில்லை. விபத்து பிரதான சாலையில், காவல் நிலையத்தில் இருந்து 6 கிலோ மீட்டர் தூரத்தில்தான் நடைபெற்றுள்ளது. இந்த விபத்தில் காயம்பட்ட விஜயகுமார் இறந்துவிட்டதாலும், அவரது மகள் மற்றும் மனைவிக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டது என தெரியவந்ததாலும், இழப்பீடு பெற்றுத்தரும் நோக்கத்தில், ஏற்கனவே கிடைக்கப்பெற்ற உண்மைத் தகவலை மறைத்தும், சம்பவ இடத்தின் உண்மை விவரத்தையும், சம்பவத்தை கண்ணுற்ற உண்மை சாட்சிகளையும் காட்டாமல் மறைத்தும், மேற்படி விஜயகுமாருக்கு வேண்டிய உறவினர்கள் மற்றும் நண்பர்களை கண்ணுற்ற சாட்சிகளாகவும், பார்வை மகசர்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:19:20 +0530

சாட்சிகளாகவும் ஜோடித்து, இவ்வழக்கின் புகார், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் குவிமுச. பிரிவு 161(3)றின் படியான வாக்குமூலங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு உருவாக்கி, இந்த வழக்கு எதிரிக்கு எதிராக தவறாக போடப்பட்டது. அதனால்தான் மேற்படி ஆவணங்களையும், உடனுக்குடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இவ்வழக்கின் விபத்திற்கு அசா.1றின் அப்பாவும், அசா.2டின் கணவருமான மேற்படி விஜயகுமார்தான் காரணம். அதை ஒப்புக்கொண்டால், இழப்பீடு கிடைக்காது என சொல்லிக்கொடுத்து, விபத்திற்கு எதிரி காரணம் என்பதுபோல, சாட்சியமளிக்கும்படி அரசுத்தரப்பில் அசா.1 மற்றும் 2டினை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்துள்ளார்கள். அவர்கள் காரினை அதன் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டிவந்தார் எனதான் சாட்சியமளித்துள்ளார்கள். எதிரிதான் அந்த காரினை ஓட்டிவந்ததாக சாட்சியமளிக்கவில்லை. இரண்டு வாகனங்கள் ஒரே சமயத்தில் இணையாக செல்லக்கூடிய சாலையில், காரினை அதிவேகமாக ஓட்டிவந்ததுதான் இந்த விபத்திற்கு காரணம் என்று அரசுத்தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், இந்த விபத்திற்கு எதிரிதான் காரணம் என்பதையும், அரசுத்தரப்பில் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே, எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டுள்ளார்.

8 (3). இந்த வழக்கில், அரசுத்தரப்பில் சொல்லப்படும் இருவாகனங்கள் இந்த விபத்தில் சம்பந்தப்பட்டுள்ளது, இவ்விபத்தானது மேற்படி வாகனங்களின் எந்தவித

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:19:34 +0530

இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை, இந்த விபத்தில் சமயத்தில், இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோவினை மேற்படி விஜயகுமாரும், காரினை இவ்வழக்கின் எதிரியும் ஓட்டினார்கள், இந்த விபத்தில் அசா.1 மற்றும் 2டிற்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது, இந்த விபத்தில் ஏற்பட்ட காயங்களினால்தான் மேற்படி விஜயகுமார் சிகிச்சை பலனின்றி இறந்தார் என அரசுத்தரப்பில் சொல்லப்படுவது உண்மைதான் என்று எதிரி தரப்பில் வாதுரையின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட சங்கதிகளை உறுதிப்படுத்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், விபத்து பதிவேட்டு ஆவணங்கள், காயச் சான்றிதழ்கள் மற்றும் சடலக்கூறாய்வு அறிக்கை ஆகியவைகள் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்த வகையிலும், இருதரப்பு வாதங்கள் அடிப்படையிலும், **"இந்த விபத்தில் மேற்படி இரண்டு வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது, இவ்விபத்தானது மேற்படி வாகனங்களின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை, இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோவினை மேற்படி விஜயகுமாரும், காரினை இவ்வழக்கின் எதிரியும் விபத்து சமயத்தில் ஓட்டியுள்ளார்கள். இந்த விபத்தில் அசா.1 மற்றும் 2டிற்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று இந்த விபத்தில் ஏற்பட்ட காயங்களால்தான் மேற்படி விஜயகுமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்"** என்பவைகள் குறித்து இருதரப்பிலும் இவ்வழக்கில் மாறுபட்ட கருத்துக்கள் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. இந்த வழக்கில் இருதரப்பிற்கு இடையே உள்ள மாறுபட்ட கருத்து யாதெனில் ?, இந்த விபத்திற்கு யார் காரணம் ? என்பதே ஆகும்.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:19:41 +0530

8 (4). எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, அரசுத்தரப்பில் மொத்தம் 13 சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அசாஆ.1 முதல் 18 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் அரசுத்தரப்பு வழக்குப்படி, அசா.1, 2 இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் காயம்பட்ட நபர்கள். மேலும் அவர்கள் இருவரும், இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன விஜயகுமாரின் மகள் மற்றும் மனைவி ஆவார்கள். மேலும் அசா.1தான், அசாஆ.1 ஆன இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தை கொடுத்தவர். அசா.4, 6 மற்றும் 12 இந்த விபத்தினை கண்ணுற்ற சாட்சிகள். அசா.3 மற்றும் 5 பார்வை மகசர் சாட்சிகள். அசா.9 முதல் 11 வரையிலான சாட்சியங்கள் பிரேத விசாரணை அறிக்கை சாட்சிகள், சம்பவம் குறித்து கேள்விப்பட்ட சாட்சிகள் மற்றும் மேற்படி விஜயகுமாரின் உறவினர்கள். அசா.7 இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இருவாகனங்களையும் ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர். அசா.8 இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது உள்ளிட்ட, சம்பவ இடம் சென்று விசாரணை செய்த முதல் புலன் விசாரணை அதிகாரி மற்றும் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர். அசா.13 இவ்வழக்கின் தொடர்புலன் விசாரணையை மேற்கொண்டு, எதிரியை கைது செய்தது உள்ளிட்ட, இவ்வழக்கின் குற்ற அறிக்கையை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர்.

8 (5). இவ்வழக்கின் விபத்திற்கு யார் காரணம் ? என்பதே, இவ்வழக்கில் இருதரப்பிற்கு இடையேயுள்ள மாறுபட்ட கருத்தாகும். இவ்வழக்கின் விபத்திற்கு இவ்வழக்கின் எதிரிதான் காரணம் என்ற எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:19:47 +0530

மெய்ப்பிக்க, இந்த சம்பவத்தில் காயமுற்றதாக சொல்லி, அசா.1 மற்றும் 2டினை அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1 மற்றும் 2டே, இந்த விபத்திற்கு இவ்வழக்கின் எதிரிதான் காரணம் என இவ்வழக்கின் எதிரியை அடையாளம் காட்டி இந்நீதிமன்றத்தில் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மாறாக அசா.1, நாங்கள் ஆட்டோவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றபோது, வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தம் அருகே, TN 30 0345 என்ற டஸ்டர் காரை அதிவேகமாக ஓட்டிவந்து, நாங்கள் சென்ற ஆட்டோ மீது மோதிவிட்டார். அவ்வாறு மோதியதில் எனக்கு இரண்டு கால்களிலும், கைகளிலும், எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டதால் நான் மயங்கிவிட்டேன். அதனால் அந்த சமயத்தில் அந்த காரின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை எனதான் சாட்சியமளித்துள்ளார். மேலும் அசா.1 சென்ற ஆட்டோவானது, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றதாகவும், அவர்கள் மீது மோதிய காரானது, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்ததாகவும் சொல்லி அரசுத்தரப்பு வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அசா.1, நாங்கள் சென்ற ஆட்டோ மீது வந்து மோதிய கார் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்ததாக, கார் வந்ததாக சொல்லப்படும் திசையையே மாற்றி, அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அதேபோல அசா.2ம், கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை சுமார் 04.45 மணியளவில், நாங்கள் வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தம் அருகே. எனது கணவருடன் அவர் ஓட்டிய ஆட்டோவில் சென்றுகொண்டிருந்தபொழுது, எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாக வந்த, TN.30 0345 என்ற

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:19:54 +0530

பதிவெண்கொண்ட கார் மோதிவிட்டது எனதான் சாட்சியமளித்துள்ளார். மேலும் அசா.2, அடிபட்டவுடன் நான் மயக்கமாகவிட்டதால், காரின் ஓட்டுநரை பார்க்கவில்லை. கார் ஓட்டுநர் யார் ? என்று எனக்கு தெரியாது என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

8 (6). அரசுத்தரப்பிலேயே விபத்து நடந்த சாலையானது, நாகூரிலிருந்து கங்காளஞ்சேரி செல்லும் கிழமேல் சாலையானது, இரண்டு பேருந்துகள் ஒரே சமயத்தில் இணையாக செல்லக்கூடிய அளவிலான அகலம் கொண்ட சாலை என்பது வாதுரையின்போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறான அகலம் கொண்ட சாலையில், விபத்து சமயத்தில், அசா.1 மற்றும் 2 சென்ற ஆட்டோ கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியும், அவர்கள் மீது மோதியதாக சொல்லப்படும் கார் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் செல்லும்பொழுது, யாராவது ஒருவர் தாங்கள் செல்ல வேண்டிய திசையின் இடதுபுறமாக செல்லாமல், வலதுபுறமாக ஏறிவந்திருந்தால் மட்டுமே அரசுத்தரப்பில் சொல்லப்படும் விபத்து ஏற்பட்டிருக்கும். அதேபோல, அதிவேகமாக வந்த காரை ஓட்டிய நபர் அதை கட்டுப்படுத்த முடியாமல், வந்தவேகத்தில் வலது பக்கமாக ஏறிசென்று ஆட்டோ மீது மோதியிருந்தாலும், அரசுத்தரப்பில் சொல்லப்படும் விபத்து ஏற்பட்டிருக்கும். ஆனால் அசா.1 மற்றும் 2, தாங்கள் இடதுபுற ஓரமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றதாகவும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த கார்தான், அது செல்லவேண்டிய திசையில் செல்லாமல், அதிவேகமாக வந்து, வந்த வேகத்திலேயே கட்டுப்படுத்த முடியாமல் வலதுபக்கமாக ஏறிவந்து மோதி, இந்த

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:20:01 +0530

விபத்து ஏற்பட்டது என்று அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. மாறாக, அதிவேகமாக கார் வந்து மோதியது என்றுதான் சாட்சியமளித்துள்ளார்கள். மேற்கண்ட சூழ்நிலையில், அதிவேகமாக கார் வந்தது என்று சொல்வதாலேயே, இந்த விபத்திற்கு அந்த கார் ஓட்டுநர்தான் காரணம் என்று கூற இயலாது. எனவே, அதிவேகமாக வந்த கார் தங்கள் மீது மோதியதாக அளித்த அசா.1 மற்றும் 2டின் சாட்சியம் மட்டுமே எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க போதுமானது இல்லை என, மேற்கண்ட வழக்குச் சூழ்நிலையில் இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

8 (7). சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.4, 6 மற்றும் 12 ஆகிய சாட்சிகளில், அசா.4, "சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் எனது வீட்டில் இருந்தபோது, என் வீட்டிற்கு முன்பாக மெயின்ரோட்டில், விஜயகுமார் என்பவர் தனது மனைவி மற்றும் மகளுடன் ஆட்டோவில் சென்றபோது, கார் மோதி விபத்து ஏற்பட்டதாக சத்தம் கேட்டு போய் பார்த்தேன். நான் விபத்தினை நேரடியாக பார்க்கவில்லை. விஜயகுமாரும், அவரது மனைவி மற்றும் மகளும், அடிபட்டு ரோட்டின் இறக்கத்தில் காணப்பட்டார்கள். அவர்களை ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து நடந்த இடத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட கார் இருந்தது. அதன் பதிவு எண் ஞாபகம் இல்லை. அங்கு அந்த காரின் ஓட்டுநர் இல்லை" என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராகத்தான்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:20:08 +0530

சாட்சியமளித்துள்ளார். எனவே, சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.4கின் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

8 (8). அரசுத்தரப்பில், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களை அசா.7 ஆன மோட்டார் வாகன ஆய்வாளர்தான் ஆய்வு செய்து, அசாஆ.3 மற்றும் 4 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை வழங்கினார் என சொல்லி, முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.7லே, **"நான் சம்பவ இடம் சென்று ஆய்வு செய்தேன். அந்த சாலையில் இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோ வழக்கம்போல சென்றுகொண்டிருந்த ஆட்டோதான் என்பதும், அதில் எப்போதும் கனரக வாகனங்கள் செல்வதால், அந்த சாலையில் ஆங்காங்கே குண்டும், குழியுமாக (Road Sliding) இருந்ததால், விபத்து நடந்த அன்று ஆட்டோவானது, ஒருபக்க சாலை பள்ளமாக இருந்ததால் வலது பக்கமாக ஏறிச்சென்றபோது, எதிரே வந்த கார் மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்பது, நான் சம்பவ இடத்தை ஆய்வு செய்த வகையில், எனக்கு தெரியவந்தது"** என சாட்சியமளித்துள்ளார். மேற்கண்டவாறுதான் விபத்து சமயத்தில் சம்பவம் நடந்த சாலையின் அமைப்பு இருந்தது என்றும், அசா.1 மற்றும் 2 சென்ற ஆட்டோவை ஓட்டிய மேற்படி விஜயகுமார்தான், தான்சென்ற திசையில், சாலை குண்டும், குழியுமாக இருந்ததாலும், பள்ளமாக இருந்ததாலும், வலதுபக்கமாக

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:20:15 +0530

ஏறிச்சென்று, எதிரேவந்த கார்மீது மோதி விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என அசா.7 அளித்த சாட்சியத்தை அரசுத்தரப்பில் பொய்யென மறுக்கப்படவில்லை.

8 (9). இந்நிலையில், சம்பவம் நடந்த சாலையான கங்காளஞ்சேரி ரோட்டில், நாகூர் ஆர்பரில் இருந்து லாரிகள் எல்லாம் செல்கிறது என்பதை ஒப்புக்கொள்ளும் அசா.6, விபத்து சமயத்தில் விபத்து நடந்த ரோடானது, ஆங்காங்கே குண்டும், குழியுமாகவும், பள்ளமாகவும் இல்லை என அசா.7 ஆன மோட்டார் வாகன ஆய்வாளரின் சாட்சியத்திற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

8 (10). விபத்து சமயத்தில், இவ்வழக்கு எதிரி ஓட்டிவந்த காரில் 4, 5 பேர் பயணம் செய்ததாகவும், விபத்து ஏற்பட்டவுடன் அந்த காரில் பயணம் செய்தவர்கள் தப்பிக்க பார்த்ததாகவும், அந்த காரின் ஓட்டுநரான இவ்வழக்கின் எதிரி அறிவழகனை மட்டும், அசா.6 உள்ளிட்ட விபத்து நடந்த இடத்தில் இருந்தவர்கள் பிடித்து வைத்திருந்ததாகவும், விபத்து குறித்து, அசா. 6 உள்ளிட்ட விபத்து நடந்த இடத்தில் இருந்தவர்களே, நாகூர் காவல் நிலையத்திற்கு போன்செய்து உடனடியாக தகவல் சொன்னதாகவும், அரசுத்தரப்பில் ஆவணங்கள் மூலம் வழக்கு முன் வைக்கப்படவில்லை. மாறாக, கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை 04.30 மணியளவில், நடந்த இந்த விபத்து குறித்து கடந்த 09.05.2022 ஆம் தேதி பகல் 01.30 மணியளவில், எதிரி நிலையம் ஆஜரானதாகவும், அவ்வாறு நிலையம் ஆஜரான எதிரியைத்தான் அன்று, அசா.13 ஆன காவல் ஆய்வாளர் கைது செய்து, காவல் நிலைய பிணையில்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:20:24 +0530

விடுவித்ததாகவும் சொல்லி, அரசுத்தரப்பு வழக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் அசா.6, "**விபத்து சமயத்தில் காரில் 4, 5 பேர்கள் இருந்தார்கள், அவர்கள் அந்த இடத்தில் இருந்து தப்பிக்கப் பார்த்தார்கள். அந்த காரின் ஓட்டுநரான அறிவழகன் என்பவரை மட்டும் அதே இடத்தில் பிடித்து உட்கார வைத்துவிட்டோம். காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு, விபத்து குறித்து நாகூர் காவல் நிலையத்தாருக்கு போன் மூலம் தகவல் சொன்னோம்"** என அரசுத்தரப்பில் முன் வைக்கப்படாத புதியதோர் சங்கதியை அசா.6 சாட்சியமாக அளித்துள்ளார். அவ்வாறு அவர் அளித்த சாட்சியத்தை தொடர்புபடுத்தும் வகையில், எந்தவித சாட்சிய, சான்றாவணங்களையும், அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

8 (11). சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.12, இருசக்கர வாகனத்தில் நான் சம்பவ இடம் வந்தபோது, இந்த விபத்தினை பார்த்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அசா.6, சம்பவம் நடந்த பின்னிட்டுதான் அசா.4 கலையரசனும், அசா.12 செந்திலும் சம்பவ இடத்திற்கு ஓடிவந்தார்கள் என, மேற்படி அசா.12டின் சாட்சியத்திற்கு எதிராக முரண்பட்ட வகையில் சாட்சியமளித்துள்ளார். அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சம்பவ இடத்திற்கான அசாஆ.6 ஆன மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திலோ, அதன் அருகிலோ, வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தம் உள்ளதாக குறிப்பிட்டு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:20:32 +0530

சொல்லப்படவில்லை. ஆனால் அசா.6, எங்கள் ஊரான வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தத்தில் பேருந்தில் ஏறுவதற்காக நின்றுகொண்டிருந்தபோது, இந்த விபத்து ஏற்பட்டதை பார்த்ததாக சாட்சியமளித்துள்ளார். மேலும் இந்த விபத்தானது, கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை 04.30 மணியளவில், நடந்தது என அரசுத்தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில், இந்த விபத்தானது, கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் நடந்தது என, சம்பவம் நடந்த நேரத்தையும் மாற்றி சாட்சியமளித்துள்ளார். மேலும் அசா.6, நான் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தபோது, திருவாரூர் பக்கமிருந்து நாகூர் நோக்கி, அதாவது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி டஸ்டர் கார் வந்துகொண்டிருந்தது. அந்த வண்டியானது கட்டுப்பாடின்றி, அதிவேகமாக சென்றுகொண்டிருந்தது. சுமார் 100 மீட்டர் தூரத்தில் நாகூர் சைடில் இருந்து வந்த ஆட்டோ மீது, அந்த கார் மோதிவிட்டது. **சத்தம் அதிகமாக கேட்டதால், நான் ஓடிப்போய் பார்த்தேன்** என முதல் விசாரணையில் சாட்சியமளித்துவிட்டு, பின்னிட்டு தனது குறுக்கு விசாரணையில், **விபத்தினை நான் நேரில் பார்த்தேன்** என முரண்பட்ட வகையில் சாட்சியமளித்துள்ளார். மேலும் அசா.6, இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோவை ஓட்டிவந்தவரை தனக்கு தெரியும் என்பதையும் தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில், மேற்கண்ட அசா.6றின் சாட்சியத்தை பார்க்கின்றபோது, சம்பவத்தை கண்ணுற்றேன் என அளித்த அவரது சாட்சியம் நம்பும்படியான ஒன்றா ?, எதிரி தரப்பில் சொல்லப்படுவதுபோல, இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோவை ஓட்டியவர் அசா.6க்கு தெரிந்தவர் என்பதால், அவரை இந்த வழக்கில் சம்பவத்தை

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:20:42 +0530

கண்ணுற்றதுபோல, அரசுத்தரப்பில் ஜோடிக்கப்பட்ட சாட்சியமா ? என்ற சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. எனவே, அசா.6றின் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

8 (12). அசா.13 ஆன புலன் விசாரணை அதிகாரி, அசா.12 தன்னுடைய குவிமுச. பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலத்தில் அவர் பேருந்து நிலையத்தில், பேருந்திற்காக நின்றுகொண்டிருந்தபோது, விபத்தினை கண்ணுற்றதாக வாக்குமூலம் அளித்துள்ளார் என இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார். ஆனால் சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செயயப்பட்ட அசா.12, தனது முதல் விசாரணையில், "கடந்த 2022 ஆம் வருடம் மாலை 04.30 மணியளவில் **நான் வெங்கிடங்கால் பஸ் ஸ்டாண்டு அருகே, இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது,** கார் ஒன்று திருவாரூர் பக்கமிருந்து வேகமாக வந்துகொண்டிருந்தது. ஆடோ ஒன்று நாகூர் பக்கமிருந்து வந்துகொண்டிருந்தது. அந்த சமயத்தில் மேற்படி கார் ஏறிச்சென்று ஆட்டோ மீது மோதியதில் ஆட்டோ இடதுபக்கமாக கவிழ்ந்துவிட்டது. காரின் பதிவு எண் TN 30 என்று மட்டும் ஞாபகம் உள்ளது. காரை ஓட்டியவர் தஞ்சாவூர் என்று சொன்னார்கள். நீண்ட நாட்கள் ஆவதால் அவரை யார் என்று எனக்கு அடையாளம் தெரியாது" என அவர் எந்த சூழ்நிலையில் சம்பவத்தை பார்த்தார் > என்பது குறித்து, மேற்படி அவரின் குவிமுச.பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். மேலும் அசா.12, நான் இருசக்கர வாகனத்தில் வந்தபோதுதான் இந்த விபத்தை

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:20:50 +0530

பார்த்ததாக போலீசார் விசாரித்தபோதும் சொன்னேன் என தனது குறுக்கு விசாரணையிலும், மேற்படி வாக்குமூலத்திற்கு எதிராகவும், அசா.13 ஆன புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு எதிராகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்கண்டவாறு ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் சாட்சியமளித்த அசா.12, பின்னிட்டு விபத்து நடந்து அரை மணி நேரம் கழித்துதான், நான் விபத்து நடந்த இடத்திற்கே சென்றேன், போலீசார் என்னை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலத்தில் என்ன எழுதினார்கள் ? என்று எனக்கு தெரியாது என தனது முந்தைய சாட்சியத்திற்கே முரண்பட்டு, அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில், சம்பவத்தை கண்ணுற்றதாக அசா.12 தனது முதல் விசாரணையில் அளித்த சாட்சியம் நம்பும்படியான ஒன்றா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, அசா.12டின் சாட்சியமும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதாக இல்லை.

8 (13). இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 135 / u/s.140 of BSA, 2023 பிரிவில் சொல்லப்பட்டவாறு, இந்த வழக்கில் அரசுத்தரப்பில் சாட்சிகளை வரிசையாக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. இந்த வழக்கில், விபத்தில் காயம்பட்ட சாட்சிகளை தொடர்ந்து, கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. மாறாக, அசா.1 மற்றும் 2 ஆன காயம்பட்ட சாட்சிகளை தொடர்ந்து, பார்வை மகசர் சாட்சிகளில் ஒருவரை அசா.3 ஆகவும், அதனைத் தொடர்ந்து கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளில் ஒருவரை

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:20:57 +0530

அசா.4 ஆகவும், மீண்டும் பார்வை மகசர் சாட்சிகளில் ஒருவரை அசா.5 ஆகவும், அதனைத் தொடர்ந்து, மீண்டும் கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளில் ஒருவரை அசா.6 ஆகவும், அதனைத் தொடர்ந்து, முதல் புலன் விசாரணை அதிகாரி உள்ளிட்ட சாட்சிகளை இதர அரசுத்தரப்பு சாட்சிகளாக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட பின்னிட்டு, சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளில் மற்றொரு நபரை, அரசுத்தரப்பின் இறுதி சாட்சிக்கு முன்பாக, அசா.12 ஆக இந்த வழக்கில் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. மேற்படி சட்டப்பிரிவுகளில் சொல்லப்பட்டவாறு, அரசுத்தரப்பில் இவ்வழக்கில் சாட்சிகளை வரிசைப்படி முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படாமல், மேற்கண்டவாறு மாற்றி, மாற்றி எதற்காக மேற்படி சாட்சிகளை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டது ? என்பதற்கு அரசுத்தரப்பில் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் சொல்லப்படவில்லை. இவ்வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முதலில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.4, தான் இந்த விபத்தினை பார்க்கவில்லை என சாட்சியமளித்த பின்னிட்டு, அசா.6றினை சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.6ம், மேற்கண்டவாறு இந்த விபத்து குறித்து ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் சாட்சியமளித்துள்ளார். அதன் பின்னிட்டு காலம் கடந்து, இந்த விபத்தினை கண்ணுற்றதாக சொல்லப்படும் மற்றொரு சாட்சியினை அசா.12 ஆக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:21:04 +0530

செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.12ம், தனது முதல் விசாரணையில், சம்பவத்தை கண்ணுற்றதாகவும், இதர சாட்சிகள் காரின் ஓட்டுநர் ஏறிச்சென்று ஆட்டோ மீது மோதியதாக சொல்லப்படாத நிலையில், அவ்வாறு ஏறிச்சென்று மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும் சாட்சியமளித்துள்ளார். பின்னிட்டு அவரே, விபத்து நடந்து அரை மணி நேரம் கழித்துதான், விபத்து நடந்த இடத்திற்கு சென்றதாக முரண்பட்டவகையில் சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட வழக்குச் சூழ்நிலையில், மேற்கண்ட சட்டப்பிரிவில் சொல்லப்பட்ட வரிசையை பின்பற்றாமல், மேற்கண்டவாறு சாட்சிகளை அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளதை பார்க்கின்றபோது, அரசுத்தரப்பில் ஒவ்வொரு சாட்சிகளையும் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படும்பொழுது, அந்த சாட்சிகள் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சொல்லாமல் விடுபட்ட விவரங்களை, பின்னிட்டு பூர்த்தி செய்யும் வகையில், மேற்படி சாட்சிகளுக்கு சொல்லிக்கொடுத்து முன்னிலைப்படுத்தப்பட்டதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

8 (14). அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட, அசா.9 முதல் 11 வரையிலான சாட்சியங்கள் இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன விஜயகுமாரின் உறவினர்கள். அவர்கள் இந்த விபத்து குறித்து கேள்விப்பட்ட சாட்சிகள்தான். அவர்கள் இந்த விபத்திற்கு காரணம் யார் என்று கேள்விப்பட்டோம் ?

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:21:11 +0530

என்றும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை.

8 (15). இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சிகளாகத்தான், அசா.3 மற்றும் 5தினை அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவர்களை சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யவில்லை. மேற்கண்டவாறு முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.3, தனது முதல் விசாரணையில், கடந்த 07.05.2022 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில், வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தத்திடம் நானும், ஜவகரும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, அதற்கு முதல்நாள் நடந்த விபத்து குறித்து, நாகூர் போலீசார் வந்து பார்த்து படம் வரைந்து எழுதினார்கள். அதற்காக எங்களிடம் சாட்சியாக கையெழுத்து வாங்கினார்கள். தற்போது காட்டப்படும் அசாஆ. 2 ஆன பார்வை மகசரில் முதலில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அதில் 2வதாக உள்ள சாட்சி கையெழுத்து ஜவகர் போட்டுக்கொடுத்தார் என அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். அவ்வாறு சாட்சிமளித்த அசா.3றே, பின்னிட்டு தனது குறுக்கு விசாரணையில், இந்த வழக்கு சம்பந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. இந்த விபத்தில் இறந்துபோன விஜயகுமார், என்னுடன் ஆட்டோ ஓட்டும் வகையில் அவர் எனது நண்பர். நான் சாட்சி கையெழுத்துபோட்ட பார்வை மகசரானது கணினியில் தயார் செய்யப்பட்டது. அதை எங்கு வைத்து தயார் செய்தார்கள் ? என்று எனக்கு தெரியாது. அசாஆ.2 ஆன பார்வை மகசரானது காவல் நிலையத்தில் வைத்து தயார்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:21:17 +0530

செய்யப்பட்டது. இந்த விபத்தில் இறந்துபோன ஆட்டோ ஓட்டுநர் விஜயகுமார் எங்களது நண்பர் என்பதால், நானும், ஜவகரும் காவல் நிலையம் சென்று, அசாஆ.2 ஆன பார்வை மகசரில் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என ஒப்புக்கொண்டு, ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

8 (16). அரசுத்தரப்பு வழக்குப்படி, இந்த விபத்தானது கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை 04.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. சம்பவத்தை கண்ணுறாத மற்றும் பார்வை மகசர் சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.5, இந்த விபத்து சம்பவமானது, கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் நடந்ததாகவும், அதை தான் கண்ணுற்றதுபோலவும், சம்பவம் நடந்த நேரத்தையே மாற்றி சாட்சியமளித்துள்ளார். அசா.8 ஆன முதல் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சிப்படி, அவர் இவ்வழக்கின் சம்பவ இடத்தை அசா.3 மற்றும் 5தின் முன்னிலையில், கடந்த 07.05.2022 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் பார்வையிட்டு, அசாஆ.2 ஆன பார்வை மகசர், அசாஆ.6 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்ததாக அரசுத்தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அசா.5, சம்பவ இடத்தை கடந்த 07.05.2022 ஆம் தேதி மாலை 07.00 மணியளவில், நாகூர் போலீசார் வந்து பார்த்து படம் வரைந்து எழுதினார்கள் என முரண்பட்ட வகையில் சாட்சியமளித்துள்ளார். மேலும் அசா.5, தனது குறுக்கு விசாரணையில், எனக்கு எழுதப்படிக்க தெரியாததால், நான் கையெழுத்து போட்ட பேப்பரில், என்ன விவரம் உள்ளது ? என்று எனக்கு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:21:23 +0530

தெரியாது. நான் சாட்சி கையெழுத்து போட்ட பார்வை மகசர் கணினியில் தயார் செய்யப்பட்டது. அதை எங்கு வைத்து தயார் செய்தார்கள் ? என்று எனக்கு தெரியாது. இந்த விபத்தில் இறந்துபோன மற்றும் காயமுற்ற நபர்கள் எனது உறவினர்கள்தான் என ஒப்புக்கொண்டு, ஒன்றுக்கொன்று முரண்பட்டவகையில், அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில், அசா.3 மற்றும் 5தின் சாட்சியங்களின் சாட்சியமும், நம்பும்படியான ஒன்றா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, அவர்களின் சாட்சியங்களும், அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

8 (17). இவ்வழக்கின் சம்பவமானது, கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில், நாகூரிலிருந்து கங்களாஞ்சேரி செல்லும் பிரதான சாலையில், போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும் உள்ள பகுதியில் நடைபெற்றது என்பதை அரசுத்தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட சம்பவம் குறித்து உடனடியாக தகவல் பெற்று, முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யப்படவில்லை. மாறாக, மேற்கண்ட விபத்து குறித்து மறுநாள் மாலை 05.00 மணியளவில்தான், அசாஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், அசாஆ.5 ஆன இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என அசா.8 சாட்சியமளித்துள்ளார். மேற்கண்டவாறு நடந்த இந்த விபத்து குறித்து, மேற்கண்ட வழக்குச் சூழ்நிலையில், ஏன் உடனடியாக புகாரினை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை ? என்பது குறித்து, அரசுத்தரப்பில் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் சொல்லப்பவில்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:21:29 +0530

8 (18). அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.6ம், விபத்து நடந்த உடனேயே நாகூர் காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் போலீசார் என்னையும் இந்த விபத்து குறித்து விசாரித்தார்கள் என அளித்த சாட்சியத்தை அரசுத்தரப்பில் பொய்யென மறுக்கப்படவில்லை. விபத்து நடந்த அன்றே, இந்த விபத்து குறித்து, போன் மூலம் நாகூர் காவல் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலும், இந்த வழக்கில் ஆவணங்கள் மூலம் சொல்லப்படாமல், அரசுத்தரப்பில் மறைக்கப்பட்டுள்ளது. மேற்படி போன் தகவல் அடிப்படையில், விசாரித்து உறுதி செய்துகொண்ட பின்னர், ஏன் உடனடியாக இந்த விபத்து குறித்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை ? என்பது குறித்தும், அரசுத்தரப்பில் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் சொல்லப்படவில்லை. அசா.1ஐ விசாரணை செய்து, அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில்தான், அசாஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன் என அசா.8 சாட்சியமளித்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலத்தில் இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட காரின் பதிவு எண்ணை அசா.1றே, கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி புகார் வாக்குமூலத்தை அளித்ததாக சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1, விபத்திற்கு பின்னர் நான் மயக்கமடைந்துவிட்டதால், அப்போது விபத்தில் சம்பந்தப்பட்ட காரின் பதிவு எண் எனக்கு தெரியாது. அதை போலீசாரே எழுதிக்கொண்டார்கள். போலீசார் எழுதிக்கொண்ட பின்னர்தான் நான் கையெழுத்து போட்டேன் என அளித்த சாட்சியத்தையும், அரசுத்தரப்பில் பொய்யென மறுக்கப்படவில்லை. மேற்கண்ட

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:21:36 +0530

சூழ்நிலையில், அசாஆ.1 ஆன புகார் வாக்குமூலமானது, அசா.1றை விசாரணை செய்து, அசா.8 ஆல் பதிவு செய்யப்பட்டதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

8 (19). கடந்த 07.05.2022 ஆம் தேதி அசா.8 ஆல் பதிவு செய்ததாக சொல்லப்படும், அசாஆ.1 ஆன புகார் வாக்குமூலமும், அசாஆ.5 ஆன முதல் தகவல் அறிக்கையும் உடனடியாக அருகிலேயே உள்ள சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த விபத்தில் காயம்பட்ட விஜயகுமார், கடந்த 08.05.2022 ஆம் தேதி, சிகிச்சை பலனின்றி இறந்த பின்னிட்டே, காலம் கடந்து, கடந்த 10.05.2022 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு, காலதாமதத்திற்கான எந்தவித காரணமுமின்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எதனால் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு, மேற்படி ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டது ? என்பது குறித்து, எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் அசா.8டின் மூலம் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை. இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தையும், முதல் தகவல் அறிக்கையையும், பதிவு செய்த நானே, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என சாட்சியமளித்த அசா.8டிடம், ஏன் மேற்படி ஆவணங்களை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தீர்கள் ? என எதிரி தரப்பில் வினாவப்பட்டது. அதற்கு அவர் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களையும் கூறவில்லை. மாறாக நான் முதல் விசாரணையில் சாட்சியமளித்ததுபோல, மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை. மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை விஜயகுமார் இறந்த பின்னிட்டு,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:21:43 +0530

ஆய்வாளரிடம்தான் ஒப்படைத்தேன் என ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சிய, சான்றாவணங்களையும், அரசுத்தரப்பு செயல்பாடு, எதிரி தரப்பு வாதுரை ஆகியவைகளை பார்க்கின்றபோது, அசா.8 சாட்சியமளித்ததுபோல, அவரால் இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா ?, ஏற்கனவே இந்த விபத்து குறித்து கிடைக்கப் பெற்ற உண்மைத் தகவலை மறைத்து, எதிரி தரப்பில் சொல்லப்படுவதுபோல, மேற்படி விஜயகுமார் இறந்த பின்னிட்டு, இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது, வழக்கிற்காக தவறாக உருவாக்கப்பட்டதா ? என்ற சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

8 (20). அசாஆ.2 ஆன இவ்வழக்கின் பார்வை மகசரானது, கணினியில் தயார் செய்யப்பட்ட ஒன்றாகும். சம்பவ இடத்தில், மேற்கண்டவாறு இவ்வழக்கின் பார்வை மகசர் எவ்வாறு தயார் செய்யப்பட்டது ? என்பது குறித்து, எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும், மேற்படி ஆவணங்கள் மூலம் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை. சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சியங்கள் வெங்கிடங்கால் பேருந்து நிறுத்தத்தில், பேருந்திற்காக நின்றிருந்தபோது விபத்தினை கண்ணுற்றதாக சொல்லப்படும் நிலையில், சம்பவ இடத்தின் அருகே மேற்படி பேருந்து நிறுத்தம் உள்ளது என்பதை, அசாஆ.6 ஆன மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அசாஆ.6 ஆன மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தின் அருகே, மேற்படி பேருந்து நிறுத்தம் உள்ளதாகவே குறிப்பிடப்படவில்லை. அதற்கான

காரணங்களும் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை. பார்வை மகசர் சாட்சியான அசா.3, மேற்படி பார்வை மகசரினை, காவல் நிலையத்தில் வைத்து கணினியில் தயார் செய்தார்கள். நாங்கள் மேற்படி விஜயகுமாரின் நண்பர்கள் என்பதால், மேற்படி பார்வை மகசரில் காவல் நிலையத்தில் வைத்துதான் சாட்சிகளாக கையெழுத்து போட்டுக் கொடுத்தோம் என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளிக்கப்பட்டபோதும், அவரது சாட்சியம் பொய்யென அரசுத்தரப்பில் மறுக்கப்படவில்லை. கடந்த 07.05.2022 ஆம் தேதியே பதிவு செய்ததாக சொல்லப்படும், மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடமும் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. இவ்வழக்கின் குற்ற அறிக்கையுடன் கடந்த 19.07.2023 ஆம் தேதிதான் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதற்கும், எத்தகைய ஏற்புடைய விளக்கங்களையும் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில், அசா.8 சாட்சியமளித்ததுபோல, இவ்வழக்கின் பார்வை மகசர், மாதிரி வரைபடம் அவரால் சம்பவ இடம் சென்று தயார் செய்யப்பட்டதா ?, கண்ணுற்ற சாட்சிகளை ஜோடிக்க வேண்டி, மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடமானது, காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டதா ? என்ற சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

8 (21). அசா.8 மற்றும் 13 ஆன புலன் விசாரணை அதிகாரிகள், இவ்வழக்கு சம்பந்தமாக பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் சாட்சிகளின் குவிமுச. பிரிவு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:21:57 +0530

161(3)றின் படியான வாக்குமூலங்கள், பிரேத விசாரணை அறிக்கை, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கைகள், ஆகியவைகள் அனைத்தும் கணினியில் தயார் செய்யப்பட்டுள்ளது. அவைகள் எவ்வாறு மேற்கண்டவாறு தயார் செய்யப்பட்டது ? என்பது குறித்து, மேற்படி ஆவணங்களில் எத்தகைய விளக்கங்களும் சொல்லப்படவில்லை. மேற்படி ஆவணங்களும் உடனுக்குடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல், இவ்வழக்கின் குற்ற அறிக்கையுடன் காலம் கடந்து, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு காலதாமதமாக அனுப்பி வைக்கப்பட்டதற்கும், எத்தகைய ஏற்புடைய விளக்கங்களையும் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை.

8 (22). கடந்த 06.05.2022 ஆம் தேதி மாலை 04.30 மணியளவில், ஏற்பட்ட விபத்தில் காயமுற்ற அசா.1, கடந்த 15.06.2022 ஆம் தேதி வரையிலும், அசா.2 கடந்த 11.08.2022 ஆம் தேதி வரையிலும், நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சையில் இருந்துவந்தது, அவர்களுக்கான அசாஆ.10, 11, 13 மற்றும் 14 ஆகிய விபத்து பதிவேட்டு ஆவணங்களையும், அசாஆ.15 மற்றும் 16 ஆன காயச்சான்றிதழ்களையும் பரிசீலினிக்கையில் புலனாகின்றது. அவ்வாறு சிகிச்சையிலிருந்த அசா.1 மற்றும் 2டை, தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்துதான் விசாரணை செய்து, அவர்களின் குவிமுச.பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலங்களை அசா.8 பதிவு செய்ததுபோல, மேற்படி வாக்குமூலங்களில் உள்ளது. ஆனால் அசா.8, மேற்படி அசா.1

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:22:03 +0530

மற்றும் 2டை, சம்பவம் நடந்த மறுநாள் 07.05.2022 ஆம் தேதி சம்பவ இடத்தில் வைத்துதான் விசாரணை செய்தேன், அவர்களை மேற்படி மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்ததாக, மேற்படி குவிமுச.பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலங்களில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தவறானது, என ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளார். அசா.1 மற்றும் 2டிற்கு, இந்த விபத்தில் எலும்பு முறிவுகள் என்ற கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. அசா.2 இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கின்றபோதும், இந்த விபத்தில் தனக்கு ஏற்பட்ட காயங்களால் இடுப்பிற்கு கீழ் எந்தவித உணர்வும் இல்லாததால், நடக்க முடியாமல் வீல்சேரில்தான் பயணிக்கிறேன் என சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில், இச்சம்பவத்தில் காயம்பட்ட அசா.1 மற்றும் 2, மேற்கண்ட தேதி வரை மேற்படி மருத்துவமனைகளில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது, அவர்களை அசா.8 சாட்சியமளித்ததுபோல, சம்பவம் நடந்த மறுநாளே, சம்பவ இடத்தில் வைத்து எப்படி விசாரணை செய்திருக்க முடியும் ? என்பது குறித்து அசா.8டின் மூலம் எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில், மேற்படிஅசா.8டின் சாட்சியம் நம்பும்படியான ஒன்றா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, அசா.8டின் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதாக இல்லை.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:22:09 +0530

8 (23). இவ்வழக்கின் முதல் புலன் விசாரணை அதிகாரியான அசா.8டின் சாட்சியமே, மேற்கண்டவாறு சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதால், அவரின் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஏற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளது. அசா.7 ஆன மோட்டார் வாகன ஆய்வாளர், சம்பவம் நடந்த சமயத்தில், சம்பவ இடத்தில், சாலையானது குண்டும், குழியுமாக இருந்ததாலும், பள்ளமாக இருந்ததாலும், ஆட்டோவை ஓட்டிவந்தவர்தான் வலதுபக்கமாக ஏறிச்சென்று, எதிரே வந்த கார் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தினார் என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக அளித்த சாட்சியத்தை பொய்யென அரசுத்தரப்பில் மறுக்கவில்லை. சம்பவ இடமானது, மேற்கண்டவாறு குண்டும், குழியுமாகவும், சாலை பள்ளமாகவும் இருந்தது என்ற விவரம் அசா.8 ஆல் தயார் செய்ததாக சொல்லப்படும், சம்பவ இடத்திற்கான பார்வை மகசர், மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பார்வை மகசர், மாதிரி வரைபடமும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு தவறாக உருவாக்கப்பட்டதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் இவ்வழக்கில் அமைந்துள்ளது. அசா.13றே, தனது குறுக்கு விசாரணையில், சம்பவ இடத்தை அசா.7 ஆன மோட்டார் வாகன ஆய்வாளர் பார்வையிட்டு, ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டார். அந்த விவரத்தை, நான் அவரை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலத்தில், எனது கவனக்குறைவால் குறிப்பிடப்படாமல் விட்டுவிட்டேன் என ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அசா.1, 2 மற்றும் இந்த விபத்தில் காயமுற்று இறந்துபோன விஜயகுமார் ஆகியோர்களுக்கு நாகப்பட்டினம் அரசு

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:22:15 +0530

மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர்களையும், சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்பதை அசா.13, தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறு அவர்களை ஏன் விசாரணை செய்யவில்லை ? என்பது குறித்து, எத்தகைய ஏற்புடைய விளக்கங்களும் அசா.13றின் மூலம் அரசுத்தரப்பில் சொல்லப்படவில்லை. அசா.8டிடம் இருந்து இவ்வழக்கினை மேல் புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்ட நான், சம்பவ இடம் சென்று விசாரணை செய்ததாகவே அசா.8 இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. இந்நிலையில், விபத்து சமயத்தில் விபத்து நடந்த சாலை நன்றாக இருந்ததால், இவ்வழக்கின் பார்வை மகசர், மாதிரி வரைபடத்தில், நாகூரிலிருந்து கங்களாஞ்சேரி நோக்கி செல்லும் இடத்தில் இடதுபுறம், குண்டும், குழியுமாக உள்ளது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என, அசா.13 அளித்த அவரது சாட்சியத்தை பார்க்கின்றபோது, அசா.8 முறையாக புலன் விசாரணை செய்யாமல், தவறாக தயார் செய்த ஆவணங்களுக்கு ஆதரவாக அசா.13ம், இவ்வழக்கின் குற்ற அறிக்கையில், தானும் புலன் விசாரணையில் ஈடுபட்டதுபோல, வெறும் கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு, தவறாக சாட்சியமளித்துள்ளாரா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, அசா.13றின் சாட்சியமும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எற்புடையதில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

8 (24). மேற்கண்ட அரசுத்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள், அரசுத்தரப்பு செயல்பாடு, மற்றும் எதிரி தரப்பு வாதுரை ஆகியவைகளை பார்க்கின்றபோது,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:22:21 +0530

மேற்கண்ட வழக்குச் சூழ்நிலையில், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல இந்த விபத்து சம்பவம் நடைபெற்றதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, இந்த விபத்திற்கு இவ்வழக்கின் எதிரிதான் காரணம் என்ற குற்றச்சாட்டுக்களானது அரசுத்தரப்பால், சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

9. **முடிவில்,**

**எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்வு காணப்பட்டிருப்பதால், இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவுகள் 279, 338 (2 எண்ணிக்கை), 304(A)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவுகள் 279, 338(2 எண்ணிக்கை), 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, u/s. 278 (1) of BNSS, 2023ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

10. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணையப்பத்திரமானது மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் தானே ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:22:26 +0530

11. இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:22:33 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்.**

**இணைப்பு** -

**சாட்சியப்பட்டியல்**

**அரசு தரப்பு சாட்சிகள்** :-

| **வரிசை எண்.** | **சாட்சிகளின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | செல்வி. செல்வப்பிரியா. |
| அ.சா.2 | திருமதி. செல்வராணி. |
| அ.சா.3 | திரு. திராவிடமணி. |
| அ.சா.4 | திரு. கலையரசன். |
| அசா.5 | திரு. ஜவஹர். |
| அசா.6 | திரு. ஜெயராமன். |
| அசா.7 | திரு. K. பிரபு (மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1) |
| அசா.8 | திரு. இளங்கோவன் - (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

| | |
|---|---|
| அசா.9 | திரு. தியாகராஜன். |
| அசா.10 | திரு. மணிமாறன். |
| அசா.11 | திரு. கனகராஜ். |
| அசா.12 | திரு. செந்தில்குமார். |
| அசா.13 | திரு. S. சிவராமன் (காவல் ஆய்வாளர்) |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>** :- இல்லை.

**<u>சான்றாவணப்பட்டியல்:</u>**

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :-

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | -- | புகார் வாக்குமூலம்- அசல் |
| அ.சா.ஆ.2 | 07.05.2022 | பார்வை மகசர் - அசல். |
| அ.சா.ஆ.3 | 12.05.2022 | TN.30 AS-0345 என்ற பதிவெண்கொண்ட காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.4 | 12.05.2022 | TN.51 D-9118 என்ற பதிவெண்கொண்ட ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.5 | 07.05.2022 | முதல் தகவல் அறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.6 | -- | மாதிரி வரைபடம் - அசல். |
| அ.சா.ஆ.7 | 08.05.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.8 | 08.05.2022 | பிரேத விசாரணை அறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.9 | 06.05.2022 | நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில், விஜயகுமார் சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் - அசல். |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:22:41 +0530

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.10 | 06.05.2022 | நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில், அசா.1 செல்வி. செல்வப் பிரியா சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் - அசல். |
| அ.சா.ஆ.11 | 06.05.2022 | நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில், அசா.2 திருமதி. செல்வராணி சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் - அசல். |
| அ.சா.ஆ.12 | 06.05.2022 | தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், விஜயகுமார் சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் - அசல். |
| அ.சா.ஆ.13 | 07.05.2022 | தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், அசா.1 செல்வி. செல்வப் பிரியா சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் - அசல். |
| அ.சா.ஆ.14 | 07.05.2022 | தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், அசா.2 திருமதி. செல்வராணி சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான விபத்து பதிவேட்டு ஆவணம் - அசல். |
| அ.சா.ஆ.15 | 11.08.2022 | தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், அசா.2 திருமதி. செல்வராணிக்கு வழங்கப்பட்ட காயம் குறித்த கருத்துரை ஆவணம்- அசல். |
| அ.சா.ஆ.16 | 15.06.2022 | தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், அசா.1 செல்வி. செல்வப்பிரியாவுக்கு வழங்கப்பட்ட காயம் குறித்த கருத்துரை ஆவணம்- அசல். |
| அ.சா.ஆ.17 | 08.05.2022 | பிரேத பரிசோதனை அறிக்கை - அசல். |
| அ.சா.ஆ.18 | 12.05.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை - அசல். |

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் :-** - இல்லை.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.31 19:22:48 +0530

**<u>சான்றுப்பொருள் பட்டியல் :</u>**

**<u>அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:-</u>** இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்று பொருட்கள் :-</u>** இல்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:22:55 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்.**

**<u>குறிப்பு</u>**

1. எதிரி பிணையிலிருந்து ஆஜரானார்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து விடுதலை செய்யப்பட்டது.
4. தீர்ப்பு பற்றி சிறு குறிப்பு குற்ற முறையீட்டு காவல் நிலையத்தாருக்கு தெரவிக்கப்பட்டது.
5. தீர்ப்பின் நகல் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.
6. எதிரிக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.
7. தீர்ப்பு நாள்.31.07.2026.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.07.31 19:23:01 +0530

**தலைமை நீதித்துறை நடுவர்,**

**நாகப்பட்டினம்.**